Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம், திருப்பூர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி. க.உ.மாராணி, பி.இ.,

ந.க. எண். 3283/ 2019 திம–2 **நாள். 06.02.2020**

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – திருப்பூர் மண்டலம் – ஈரோடு மாவட்டம் – பெருந்துறை வட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குட்டப்பாளையம் ஊராட்சி மற்றும் வெள்ளோடு கிராமம் – க.ச.எண். 884/5 –ல் அமையும் 0.45.50 ஹெக்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 3 பிளாக்குளில் 120 (G+2) குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்க தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டது – தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம் அவர்களின் கடிதம் : 234/JA/TPN Dvn / 2019 நாள். 25.11.2009.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள். 16.04.2009.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள். 04.04.2012.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/spl.cell, நாள். 28.09.2017.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/சிபி, நாள் 14.12.2017.
6. இவ்வலுவலக கடிதம் இதே எண்3283 /2019 திம–2. நாள். 06.01.2020
7. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
8. அரசாணை எண். 18, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.02.2019.
9. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் மூ.மு.எண்.1245/இ1/2020 நாள். 06.02.2020.
10. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/ந.ஊ.2, நாள். 31.10.2019.

ஆணை :

ஈரோடு மாவட்டம் – பெருந்துறை வட்டம் – சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குட்டப்பாளையம் ஊராட்சி மற்றும் வெள்ளோடு கிராமம் – க.ச.எண்.884/5 –ல் அமையும் 0.45.50 ஹெக்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 3 பிளாக்குளில் 120(G+2) குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்திற்கு 'A முதல் F' என எல்லையிட்டு **ம.வ/நஊ(திம) எண் 16/2019** என எண்ணிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச கட்டுமான பரப்பு விவரம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

உத்தேச மனையிடத்தின் பரப்பு - 0.45.50 ஹெக்டர்

Block "A"	Non FSI Area	Net FSI Area	Total Built up Area	No of Dwelling Units
தரை தளம்	–	591.27 ச.மீ.	591.27 ச.மீ.	16
முதல் தளம்	–	591.27 ச.மீ.	591.27 ச.மீ.	16
இரண்டாம் தளம்	–	591.27 ச.மீ.	591.27 ச.மீ.	16
மாடிப்படிக்கட்டு அறை	16.15 ச.மீ.	–	16.15 ச.மீ.	–
மொத்தம்	**16.15 ச.மீ.**	**1773.81ச.மீ.**	**1789.96 ச.மீ.**	**48**

Block "B1"	Non FSI Area	Net FSI Area	Total Built up Area	No of Dwelling Units
தரை தளம்	–	444.09 ச.மீ.	444.09 ச.மீ.	12
முதல் தளம்	–	444.09 ச.மீ.	444.09 ச.மீ.	12
இரண்டாம் தளம்	–	444.09 ச.மீ.	444.09 ச.மீ.	12
மாடிப்படிக்கட்டு அறை	16.15 ச.மீ.	–	16.15 ச.மீ.	–
மொத்தம்	**16.15 ச.மீ.**	**1332.27 ச.மீ.**	**1348.42 ச.மீ.**	**36**
Block "B2"	**Non FSI Area**	**Net FSI Area**	**Total Built up Area**	**No of Dwelling Units**
தரை தளம்	–	444.09ச.மீ.	444.09 ச.மீ.	12
முதல் தளம்	–	444.09ச.மீ.	444.09 ச.மீ.	12
இரண்டாம் தளம்	–	444.09ச.மீ.	444.09 ச.மீ.	12
மாடிப்படிக்கட்டு அறை	16.15 ச.மீ.	–	16.15 ச.மீ.	–
மொத்தம்	**16.15 ச.மீ.**	**1332.27ச.மீ.**	**1348.42 ச.மீ.**	**36**

Total No. of Tenements – 120 Nos.

Total Construction Area – 591.27 M^2 + 591.27 M^2+591.27 M^2+ 444.09 M^2+ 444.09 M^2+ 444.09 M^2+ 444.09 M^2+ 444.09 M^2+ 444.09 M^2

= 4438.35 M^2

48
36
36
120

Floor Space Index = 1.035

Plot Coverage = 34.487%

Open space Reservation = 493.23 ச.மீ. (10.84%)

மேற்கண்ட உத்தேச 3 பிளாக்குளில் 120 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி / திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ/நஊ(திம) எண்.07/2020** என எண்ணிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள்

1) As per Ministry of Environment, Forest and Climate change Notification, dated. 22.12.2014. "The buildings shall ensure sustainable environmental Management solid and liquid waste Management rain water harvesting and may use recycled materials such as fly ash bricks".

2) As per G.O (Ms) No.161, H&UD Department, dated. 26.06.2013 "OSR portion is earmarked as OSR and kept open to sky without any construction.

3) "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

4) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setbacks), வாகன நிறுத்தம் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.

5) G.O.Ms.No.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். **04.02.2019–ன்படி** தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

6) கட்டடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற பின் ஒப்பந்ததாரர் மூலம் ஷோரிங் செய்யப்பட வேண்டும்.

7) Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

8) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

9) The provisions in the G.O.(Ms) No.17, Housing and Urban Development (UD4(3)) Department dated: 05.02.2016 relating to installation and use of Solar Energy system should be followed.

10) தீயணைப்புத் துறையின் தடையின்மை சான்று மற்றும் பொதுபணித் துறையின் வாய்க்கால் குறித்து உரிய தடையின்மை சான்று பெறப்பட வேண்டும். பெறப்பட்ட பின் மேற்கண்ட துறைகளின் நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.

11) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு W.P.(MP) No. 6912 and 6913 of 2019-ல் நீதிமன்ற உத்தரவு நாள். 02.04.2019–ன்படி பின்பற்றப்பட வேண்டும்.

12) கட்டடம் அமையும் மனையினை ஒட்டி அல்லது மனையின் ஊடே நீர்நிலைகள் / வாய்க்கால் ஏதும் அமையும் பட்சத்தில் விதிகளுக்குட்பட்டு நீர்நிலையின் எல்லையிலிருந்து குறிப்பிட்ட இடைவெளி விட்டு கட்டடம் அமைக்கப்பட வேண்டும்.

13) அணுகுசாலை குறித்து உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

14) குறைந்த மின்னழுத்த பாதை ஏதும் உத்தேச மனையில் அமைந்திருப்பின் மனுதாரர் தனது சொந்தசெலவில் சாலையின் போக்கிற்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.

<u>பொது நிபந்தனைகள்</u>

1. உத்தேச கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும். பூங்கா ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
3. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எந்தவித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
4. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002–ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
5. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
6. Site Plan-ல் காட்டப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.
7. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
8. அரசாணை எண்.341 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1), நாள், 03.11.2004–ன்படி செப்டிக் டேங்கில் **"U" Trap** அமைத்தல் வேண்டும்.
9. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு **"FLY ASH BRICKS"** மற்றும் **Materials** பயன்படுத்தப்பட வேண்டும்.
10. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
11. The Applicant/developer, Government Departments and also the architects/Registered Engineers and the Structural Engineer associated with the

development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

12. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

13. பார்வை 4–ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any polot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"

14. பார்வையில் சுட்டிய அரசாணையின்படி கீழ்க்காணும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

i. The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney Holder and any other Person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall not put the building to use without obtaining Completion Certificate from The Assistant Deputy Director of Town & Country Planning,Tiruppur Region, Tiruppur

ii. a) The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit the application along with the plan showing the Site Boundary, dimension of the building and the setback on all around and the plan must be authenticated by the applicant and Architect/Structural Engineer/Licensed Surveyor for the issue of Construction Continuance Certificate (CCC).

b) Also, the Applicant/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit application along with a drawing / plan showing the actual construction made at site when the construction is completed without any requirement of further civil works for the issue of Completion Certificate (CC)

iii. The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall comply and other conditions/directions stipulated in the operational guidelines issued/subsequently to be issued by the DTCP.

உள்ளாட்சி நடைமுறைகளுக்கு உட்பட்டு உரிய உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி வட்டார வளர்ச்சி அலுவலர், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் / தலைவர் குட்டப்பாளையம் ஊராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக வட்டார வளர்ச்சி அலுவலர், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் / தலைவர் குட்டப்பாளையம் ஊராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் / தலைவர் குட்டப்பாளையம் ஊராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருப்பூர் மண்டலம், திருப்பூர் .

இணைப்பு
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
2 தொகுப்புகள்.

பெறுநர்
தலைவர் / தனி அலுவலர்,
குட்டப்பாளையம் ஊராட்சி,
சென்னிமலை ஊராட்சி ஒன்றியம்,
ஈரோடு மாவட்டம்.

நகல்:
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
188, போயம்பாளையம் பிரிவு,
பெருமாநல்லூர் ரோடு,
திருப்பூர் கோட்டம், திருப்பூர்– 641 602.
} பத்தி ஒன்று மட்டும்.

18/02/2020
EXECUTIVE ENGINEER
TNSCB Tiruppur Division

21

ஜெ.குட்டப்பாளையம் ஊராட்சி கட்டிட அனுமதி உத்திரவு
சென்னிமலை ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு/மதி. கே. ரேவதி தேவி

மூ.மு. எண் 14/2019-2020 -20

நாள் : 17-02-2020

பொருள் : தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகள் 1997 சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் ஜெ. குட்டப்பாளையம் ஊராட்சி ரீ.ச. 884/5 ல் கட்டிடம் கட்டும் வரைபடத்திற்கு அங்கீகாரம் அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

பார்வை : திரு. செயற்பொறியாளர், குடிசை மாற்று வாரியம், திருப்பூர் என்பவரின் விண்ணப்பம்

****

உத்திரவு : பார்வையில் காணும் கடிதப்படி வரலான விண்ணப்பத்தில் கண்டுள்ள சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் ஜெ. குட்டப்பாளையம் ஊராட்சி ரீ.ச. 884/5 ல் கட்டிடம் கட்ட 1997-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதியின் கீழும் 1958-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டத்தின் 159 (2) (பிரிவின் 4-ன் (1) வருட விதியின் கீழும் கீழ்க்கண்டவாறு நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. இந்த அனுமதி 17-02-2020 முதல் 16-02-2021 வரை ஒரு வருட காலத்திற்குள் அமுலில் இருக்கும்.
2. ஊராட்சி நிலத்தில் அல்லது தெருவில் எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
3. பொது பாதையிலிருந்து **1.5** மீ தூரத்தில் நிலையான கட்டிடங்கள் ஏதும் இருக்கக்கூடாது சுற்று சுவர் கட்டிக் கொள்ளலாம். சுற்றுசுவர் 1.9 மீட்டருக்கு மேற்படாமல் கட்டப்பட வேண்டும்.
4. கட்டிடத்திற்கு அனுமதி பெற்றுள்ள இடத்தின் கட்டிடம் கட்ட மண் எடுக்க கூடாது.
5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடப்படி கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்ய வேண்டியிருப்பின் முன் கூட்டியே இவ்வலுவலக அனுமதி பெற வேண்டும்.
6. கட்டிடம் கட்ட கொடுக்கப்பட்ட காலவரம்பிற்குள் கட்டிடம் கட்ட முடிக்க இயலவில்லை எனில் அதற்கு 30 நாட்களுக்கு முன்னதாக கால நீட்டிப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
7. கட்டிடம் கட்டுமிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல் வைக்கப்படுவதுடன் ஊராட்சி மற்றும் ஊர்நல அலுவலர் பார்வைக்கு வேண்டும் போது ஆஜர் செய்ய வேண்டும்.
8. கழிப்பிடம் சாக்கடை, தொட்டி முதலியன சுகாதார முறைப்படி கட்டி தளம், போட வேண்டும். எளிதாக சுத்தம் செய்ய மார்க்கம் உள்ளதாக இருக்க வேண்டும்.
9. சென்னை சுகாதார சட்ட பிரிவின் 26, 33 விதிகளின்படி அத்தாட்சி பெறாமல் மேற்படி கட்டிடத்தில் குடியேறவோ அல்லது குடிவைக்கவோ கூடாது.
10. தற்போது செலுத்தப்பட்ட தொகை குறைவென தெரியவந்தால் உடனே கூடுதல் தொகையை செலுத்திவிட வேண்டும்.
11. தற்போது இந்த வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டுவதற்கு மட்டுமே கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படுகிறது.
12. கட்டிடம் மெயின் ரோட்டிலிருந்து பொதுவான இடம் விட்டு கட்ட வேண்டும்.
13. மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும்.

பெறுநர் : திரு / திருமதி

செயற்பொறியாளர்,
குடிசை மாற்று வாரியம்,
திருப்பூர்கோட்டம்,
திருப்பூர்

18/02/2020
EXECUTIVE ENGINEER
TNSCB Tiruppur Division

17/02/2020
தலைவர்,
தலைவர்,
ஜெ.குட்டப்பாளையம் ஊராட்சி,
சென்னிமலை வட்டாரம்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate